## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

ஸ்ரீ லங்கன் எயார்லைன்ஸ் லிமிட்டட்டினதும் (கம்பனி) மற்றும் கம்பனி மற்றும் அதன் துணைக் கம்பனியினதும் (தொகுதி) 2021 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த விரிவான வருமானக் கூற்று, உரிமை மாற்றலக்கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. இந்தக் கணக்காய்வினை மேற்கொள்வதற்கு பட்டயக்கணக்காய்வாளர் நிறுவனத்தின் உதவியைப் பெற்றுக்கொண்டேன்.

கம்பனியின் 2021 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டுக் நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 விடயத்தினைச் சுட்டிக் காட்டல்

#### (அ) தொடர்ந்து செல்லும் எண்ணக்கரு தொடர்பான பொருண்மையான நிச்சயமற்றதன்மை

நிதிக்கூற்றுக்களின் குறிப்பு 03 இல் கவனஞ்செலுத்தியவாறு, 2021 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டின்போது ஏற்பட்ட ரூபா 45,231.46 மில்லியன் தேறிய நட்டத்துடன் ரூபா 371,733.52 மில்லியன் திரண்ட நட்டத்தை கம்பனி ஏற்படுத்தியிருந்தது. அத்திகதியில், கம்பனியின் நடைமுறைப்பொறுப்புக்களானது அதனுடைய சொத்துக்களை ரூபா 221,308.99 மில்லியனால் விஞ்சியிருந்ததுடன் மொத்தப் பொறுப்புக்களானது மொத்தச் சொத்துக்களை ரூபா 289,265.27 மில்லியனால் விஞ்சியிருந்தது. மேலும், குழுவானது மொத்த நட்டம் ரூபா 366,284.57 மில்லியன் திரண்ட நட்டத்துடன் 2021 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டின் போது ரூபா 49,704.51 மில்லியன் தேறிய நட்டத்தை ஏற்படுத்தியிருந்ததுடன் அத்திகதியிலுள்ளவாறு குழுவின் நடைமுறைப்பொறுப்புக்களானது அதனுடைய நடைமுறைச் சொத்துக்களை ரூபா 214,635.95 மில்லியனால விஞ்சியிருந்ததுடன் மொத்தப்பொறுப்புக்களானது அதனுடைய மொத்தச் சொத்துக்களை ரூபா 281,490.87 மில்லியனால் விஞ்சியிருந்தது.

குறிப்பு 03 இல் குறிப்பிட்டவாறு, இந்த நிகழ்வுகள் மற்றும் நிபந்தனைகள் குறிப்பு 03 இல் நான்காம் பந்தியில் காட்டப்பட்ட ஏனைய விடயங்களுடன் சேர்த்து தொடர்ந்து செல்லும் எண்ணக்கருவாக தொடருவதற்கு குழுவின் மற்றும் கம்பனியின் இயலுமை மீது பொருண்மையான நிச்சயமற்றதன்மையானது முக்கிய சந்தேகத்தை ஏற்படுத்தக்கூடும்.

நிதிக்கூற்றுக்களின் 2.1 ஆம் குறிப்பானது கொவிட் -19 இன் விளைவானது எவ்வாறு குழுவின் கம்பனியின் எதிர்கால நிலைமைகள், செயலாற்றல்கள் மற்றும் காசுப்பாய்ச்சல் விளைவினை ஏற்படுத்துமென விபரிக்கின்றது. முகாமைத்துவமானது நிதிக்கூற்றுக்களை முடிவுறுத்தும் நேரத்தில் இந்த தீவிர நோய் பரவுவதால் இந்த நிகழ்வுகள் மற்றும் சூழ்நிலைகளை எவ்வாறு கையாளுவதற்கு திட்டமிட்டார்கள் என விபரித்தனர்.

2022 பெப்ரவரி 07 இன் அமைச்சரவை அனுமதி மற்றும் 2021 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நியதி கணக்காய்வு நோக்கத்திற்காக பெறப்பட்ட 2022 பெப்ரவரி 24 இல் உள்ளவாறான திறைரேியின் செயலாளரால் வழங்கப்பட்ட கடிதத்துடன் இணைந்து குறிப்பு 03 இல் வெளிக்காட்டப்பட்டவாறு குறைக்கும் காரணிகளை கவனத்தில் எடுக்கையில் கம்பனியானது ''தொடர்ந்து செல்லும் எண்ணக்கருவாக'' செயற்பவதற்காக இலங்கை அரசாங்கத்தின் ஆதரவை உறுதிப்படுத்தி தொடர்ந்து செல்லும் எண்ணக்கரு எடுகோளை பயன்படுத்தி இந்த நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தது.

**(ஆ) ஏ 350 – 900 ஏயார்கிறாப்ட் இன் முன் விநியோக கொடுப்பனவுகள்**

2021 மார்ச் 31 இல் உள்ளவாறு விமானத்திற்குச் செலுத்தப்பட்ட ரூபா 2,528.12 மில்லியன் (யூஎஸ்டி 19.21 மில்லியன்) தொகையான முன் விநியோக கொடுப்பனவு மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு குறிப்பு இலக்கம் 11 – வியாபார மற்றும் ஏனைய வருமதிகளின் கீழ் மீள வகைப்படுத்தப்பட்டிருந்தது என குறிப்பிட்டு குறிப்பு இலக்கம் 06 இல் கவனஞ்செலுத்தப்படுகின்றது.

குறிப்பு இலக்கம் 6 இல் குறிப்பிட்டவாறு முன் விநியோகக் கொடுப்பனவை வட்டியுடன் பெறுவதற்கு கோரி ஏயார்வஸ் எஸ்.ஏ.எஸ் மற்றும் ஏயார்வஸ் எஸ்ஈ இற்கு கோரிக்கை கடிதத்தை அனுப்பியது. முன் விநியோகக்கொடுப்பனவை அறவிடுவதற்கான வெளியீடானது கம்பனிக்கு சாதகமற்றதாக இருக்கமுடியாதென நம்புவதற்கு இவ் நேரத்தில் கம்பனியின் முகாமைத்துவத்திற்கு தகவல் கிடைத்திருக்கவில்லை.

எனினும், அறவீடானது தீர்ப்னவு செய்யாதவிடத்து எடுக்கப்படுகின்ற வாதகமான சட்ட நடவடிக்கையின் விளைவில் தங்கியுள்ளதுடன் அறிக்கைத் திகதி வரையிலும் சொல்லப்பட்ட முன் விநியோக கொடுப்பனவுகளினை அறவிடுதல் தொடர்பான கம்பனியின் எடுகோளுக்கு எதிராகவுள்ள மேலதிக தகவல்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிருக்வில்லை.

எனது அபிப்பிரயமானது இந்ந விடயங்களின் அடிப்படையில் மாற்றஞ்செய்யப்பட்டிருக்கவில்லை.

**1.4 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

-----------------------------------------------------------------------------------------------------------

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, குழுவின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது கம்பனியினைக் கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் கம்பனியின் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

கம்பனி மற்றும் குழுவின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம், கம்பனி மற்றும் குழுவின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.5 கணக்காய்வின் நோக்கெல்லை

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக கம்பனியின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக தொகுதியின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொகுதியின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்த நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயத்தை வெளிப்படுத்துவதற்கு குழுவினுள்ள நிறுவனங்கள் அல்லது வணிக நடவடிக்கைகள் தொடர்பில் போதிய மற்றும் பொருத்தமான

கணக்காய்வுச் சான்றினை பெறுதல். நாங்கள் எங்களுடைய கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு தனியாக பொறுப்பாகவுள்ளோம்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது கம்பனியின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்,

- கம்பனி ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது கம்பனியின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க கம்பனி செயற்படுகின்றதா எனவும்,

- கம்பனி தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்,

- கம்பனியின் வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்.

## 1.6 நிதிக்கூற்றுக்கள்

### 1.6.1 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொது மற்றும் குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்துடன் செயற்படுத்துதல் உரிய அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களை பதிவுசெய்தல் மற்றும் சொத்துக்களுக்காக கணக்களிதன்மையை பேணிச் செல்லல், முகாமைத்துவத்தினால் பொது மற்றும் திட்டவட்டமான அதிகாரத்துடன் கூடிய சொத்துக்ளுக்கு மாத்திரம் சொத்துக்களை அணுகுதல், பதிவுசெய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணக்களிதன்மை காணப்படும் சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியில் சீராக்கம் மற்றும் வேறுபாடுகள் காணப்பட்டால் அதுதொடர்பாக உரிய நடவடிக்கைகளை எடுத்தல் போன்றவற்றுக்கான நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக் கொள்வதற்கு போதியளவு ‘‘முறையாக திட்டமிடப்பட்ட’’ உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையொன்றை நிறுவனம் பராமரித்துக்கொள்வது அவசியமாகவுள்ளது.

## 1.6.2 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| குறித்த நியமத்துடன் இணங்காமை | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **நிதிக்கூற்றுக்களை தயாரித்து சமர்ப்பிதற்கான நிதி வரையறை மற்றும் எஸ்எல்எவ்ஆர்எஸ் 16**<br>முன்னைய ஏயார் செலோனாகவிருந்த ஏயார் லங்காவிடமிருந்து கம்பனியானது கட்டிடத்தை சுவீகரித்திருந்த போதிலும் கம்பனிக்கு அத்தகைய கட்டிடங்களின் சட்ட உரிமையாண்மையை மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.<br>மேலும், 2018 மார்ச் 31 இல் உள்ளவாறு சந்தை மதிப்பீட்டாளாரால் வழங்கப்பட்ட மதிப்பீட்டின் பிரகாரம் மேற்கூறப்பட்ட கட்டிடங்களின் சந்தைப் பெறுமதி ரூபா 38.6 மில்லியனாகவிருந்தது. எனினும், அனுபவிக்கின்ற பொருளாதார நன்மைகளை அடிப்படையாகக் கொண்டு நிதிக்கூற்றுக்களை தயாரித்து சமர்ப்பிதற்கான நிதி வரையறை மற்றும் எஸ்எல்எவ்ஆர்எஸ் 16 இன் பிரகாரம் முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சட்ட உரிமையாண்மை இன்மையால் கம்பனியின் சொத்துக்களாக இத்தகைய கட்டிடங்களை கருதமுடியாது என்ற பார்வையில் முகாமைத்துவமுள்ளது. | அத்தகைய சொத்துக்களின் பொருளாதார நன்மைகள் எந்தவித தடங்கலுமில்லாமல் கம்பனியால் அனுபவிக்கப்பட்டு வருகின்றது. ஆகையால், கம்பனியானது சொத்துக்களின் உரிமையாண்மை நிலைமையை திருத்தவேண்டியிருப்பதுடன் நிலையான சொத்துக்களாகவோ அல்லது குத்தகை சொத்துக்களாகவோ இனங்காணப்பட வேண்டும். |

## 1.6.3 அனுமதியளிக்கப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

| அனுமதியளிக்கப்படாத கொடுக்கல் வாங்கல்களின் விபரம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஆறு (06) ஏ330-300 விமானங்கள் மற்றும் நான்கு (04) ஏ350-900 விமானங்களினைக் கொள்வனவு செய்தல், மற்றுமொரு நான்கு (04) ஏ350-900 விமானங்களினை குத்தகைக்கு எடுத்தல் மற்றும் மேற்குறித்த ஆறு (06) ஏ330-300 விமானங்களினை விற்பனை செய்வதுடன் குத்தகைக்கு மீள எடுத்தலுக்கான தீர்மானம் முறையானதொரு கிரய நலன்கள் பகுப்பாய்வினை மேற்கொண்டிராது மற்றும் அமைச்சரவையின் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ளாது 2013 இல் கம்பனியின் பணிப்பாளர் சபையினால் எடுக்கப்பட்டிருந்தது.<br>அதேநேரம், தற்போது கம்பனி ஏ321 என்ஈஓ மற்றும் ∴ அல்லது ஏ330 என்ஈஓஎஸ் இனை மாற்றீடு செய்வதற்கு 2020 மற்றும் 2021 இல் விநியோகிக்கப்பட வேண்டிக் காணப்படுகின்ற நான்கு (04) எண்ணிக்கையான ஏ350-900 விமானங்களின் கொள்வனவு உடன்படிக்கையினை திருத்தஞ் செய்வதற்கு எயாபஸ் எஸ்ஏஎஸ் கம்பனியுடன் பேச்சு வார்த்தையில் காணப்படுகின்றதுடன் அறிக்கை திகதியில் உள்ளவாறு ரூபா | தீவிரமான மோசடி அலுவலகம் மற்றும் ஏயார்பஸ் எஸ்ஈ இற்குமிடையில் பிற்போடப்பட்ட வழக்கு உடன்படிக்கையை அனுமதித்து ஐக்கிய இராஜ்ஜியத்தின் கிறவுண் நீதிமன்றத்தின் தீர்ப்பில் எஸ்எல்ஏ ஆல் ஏயார்பஸ் எஸ்ஈ இன் உத்தியோகத்தர்கள் ஆறு (6) ஏ330 – 300 மற்றும் நான்கு (4) ஏ350 - 900 விமானத்தை கொள்வனவு செய்வதிலும் மற்றும் நான்கு(4) ஏ350–900 விமானங்களை குத்தகைக்குப் பெறுவதிலும் ஈடுபடுவதற்காக எஸ்எல்ஏ இன் முன்னைய நிறைவேற்றுனரின் மனைவிக்குச் சொந்தமான கம்பனிக்கு கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு ஏயார்பஸ் எஸ்ஈ இன் | அவ்வாறான பாரிய முதலீடுகளினை மேற்கொள்வதற்கு முன்னர் விபரமான மற்றும் யாதார்த்தமான கிரய நலன் பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட வேண்டும். எதிர்காலத்தில் சிககனமற்ற கொடுக்கல்வாங்கல்களை தவிர்ப்பதற்கு முறையான கிரயநலன் பகுப்பாய்விற்குப்பின்னர் கொள்வனவுசெய்யப்பட வேண்டிய எயார்கிராப்ட் இன் கலவையினை கம்பனி தீர்மானிக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| 2,528.12 மில்லியன் (ஐ.அ.டொலர் 19.21 மில்லியன்) தொகையை முன்விநியோக செலுத்துகையாக எயாபஸ் இற்கு செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், இந்த 2022 மார்ச் 31 வரையிலும் இது தொடர்பில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டிருக்கவில்லை. எனினும், ஆறு (06) ஏ330-300 விமானங்கள் கொள்வனவு செய்யப்பட்டதுடன் 2013 இல் விற்கப்பட்டு 2014 இல் மீள குத்தகைக்கு எடுக்கப்பட்டது.<br>மேலும், குத்தகையின் அடிப்படையில் நான்கு (04) ஏ350-900 விமானங்களினைப் பெற்றுக் கொள்வதற்கான குத்தகை உடன்படிக்கையினை இரத்துச் செய்தல் செயன்முறையில் இழப்பீடாக 2016.˙.2017 ஆம் ஆண்டில் ரூபா 16,924.36 மில்லியன் தொகையொன்று செலுத்தப்பட்டிருந்தது. இதற்குமேலதிகமாக, ஏயார்பஸ் இன் உத்தியோகத்தர்களுக்கு இந்தக் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பில் ஸ்ரீ லங்கன் எயார்லைன்ஸ் இன் முன்னைய பிரதம நிறைவேற்று உத்தியோகத்தரின் மனைவிக்கு சொந்தமான கம்பனிக்கு கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு ஏயார்பஸ் இன் உத்தியோகத்தர்கள் இணங்கியிருந்தனர் என ஐக்கிய இராஜ்ஜியத்தின் கிறவுன் நீதிமன்றத்தின் தீர்ப்பில் வெளிப்படுத்தியது. முன்னைய சீஈஓ மற்றும் சேதங்களினை அறவிடுவது தொடர்பில் முன்னைய பிரதம நிறைவேற்று உத்தியோகத்தரிற்கு எதிராக கம்பனியால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உத்தியோகத்தர்கள் இணங்கியிருந்தனர் என குறிப்பிடப்பட்டிருந்தது. கிடைக்கப்பெற்ற சட்ட ஆலோசனையை அடிப்படையாகக் கொண்டு யு350 – 900 கொள்வனவு உடன்படிக்கையை மாற்றுவதற்கும் 2020 திசெம்பர் 29 ஆந் திகதிய (நடவடிக்கைக்கு முன்னரான கடிதம்) கடிதத்தால் நட்டஈட்டுடன் செலுத்தப்பட்ட பீடிபீக்களை அறவிடுவதற்கான தேவைப்பாடுகளையும் உள்ளடக்கி அதனுடைய கோரிக்கையை எஸ்எல்ஏ ஏயார்பஸ் எஸ்.ஏ.எஸ் இற்கு அறிவித்தது. ஏயார்பஸ் அதனுடைய நட்பிணக்கமான தீர்ப்னவொன்றை கலந்தாலோசித்ததுடன் இது சட்டமா அதிபதியின் அறிவுரையுடன் சுறுசுறுப்பாக பின்தொடருகின்றது. சேதங்களை கோரியும் பதில்களை எதிர்பார்த்தும் முன்னைய சீஈஓ இற்கு எதிராக சிவில் நடவடிக்கை எடுக்கப்படுமா என சட்டமா அதிபதி திணைக்களத்திடமிருந்து எஸ்எல்ஏ அறிவுரையை பெற்றது. | கம்பனியின் சேதங்களை அறவிடுவதற்கு ஏயார்பஸ் மற்றும் முன்னைய சீஈஓ இற்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.6.4 நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் தன்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவக் கருத்துரை | சிபாரிசு |
|---|---|---|---|
| (அ) | கம்பனி மூலதனமாக்கலின் கீழ் காணப்படுகின்றதுடன் 2020 – 2022 ஆம் ஆண்டு காலப்பகுதியின் போது யூஎஸ்டி 500 மில்லியன் வரை மீள்மூலதனமாக்குவதற்கு திறைசேரியானது அமைச்சரவை அங்கீகாரத்தை பெற்றிருந்தது. ரூபா 26,890 மில்லியனிற்குச் சமனான யூஎஸ்டி 150 மில்லியன் முதல்துண்டு 2020 நவம்பர் 18 இல் பெறப்பட்டதுடன் 17,850 மில்லியனிற்குச் சமனான யூஎஸ்டி 90 மில்லியன் இரண்டாந்துண்டு 2021 ஏப்ரலில் விடுவிக்கப்பட்டது. எனினும், அத்தகைய நிதிகள் கம்பனியின் தொழிற்படுமூலதன நோக்கங்களிற்காக பயன்படுத்தப்பட்டிருந்தது. | கொவிட் பரவலால் ஒட்டுமொத்த எயார்லைன்ஸ் துறைக்கு ஏற்பட்ட முக்கிய விளைவை கருத்திற்கொள்கின்ற போது எயார்லைன்ஸ் இன் செயற்பாட்டினை நிலைநிறுத்துவதற்கு 2020.˙.21 இல் தொழிற்படு மூலதன நோக்கங்களிற்காக மூலதன உட்செலுத்தல் வழங்கப்பட்டிருந்தது. | மூலதன உட்செலுத்தல் தொழிற்படு மூலதன நோக்கங்களிற்குப் பதிலாக முதலீட்டு நடவடிக்கைகளுக்காகவும் பயன்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | கம்பனியின் கடன்படு நிலைமையினை அதிகரிக்கின்ற போது 2017.˙.2018 ஆண்டின் போது அரச வங்கிகளிடமிருந்து ஐ.அ.டொலர் 200 மில்லியன் வங்கி கடன் வசதிகள் (அண்ணளவாக ரூபா 37,960 மில்லியனுக்குச் சமமானது) மற்றும் ரூபா 26,250 மில்லியன் ரூபா கடன்கள் பெறப்பட்டிருந்தது.<br>அறிக்கைத்திகதி வரையிலும் எந்தவொரு கடன்களும் செலுத்தப்பட்டிருக்காததுடன் 2019.˙.20 மற்றும் 2020.˙.21 ஆம் ஆண்டுகளில் கடன் வட்டியாக முறையே ரூபா 6,563.88 மில்லியன் மற்றும் ரூபா 6,253.04 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. மேலும், யூஎஸ்டி 75 மில்லியன் புதிய கடன் வசதிகள் தொழிற்படு மூலதன நோக்கங்களிற்காக மீளாய்வாண்டின் போது இரண்டு அரச வங்கிகளிடமிருந்து பெறப்பட்டிருந்தது. | இரண்டு அரச வங்கிகளிடமிருந்து பெறப்பட்ட வசதிகளின் மீள்கொடுப்பனவு கம்பனியின் ஒட்டுமொத்த மீள்கட்டமைப்பின் பகுதியொன்றாக உருவாக்கப்படுமென்பதுடன் கொவிட் - 19 இன் பாரிய விளைவினால் நாட்டில் ஏற்பட்ட தொடர்ச்சியான நிலமையினால் இது சுற்றுலாவிற்கான ஒன்றாகவிருக்கவில்லை. | வியாபாரத்தினை சிக்கனமானதாக மற்றும் இலாபத்தன்மை வாய்ந்த முறையில் நடாத்திச் செல்லுதல் மற்றும் கம்பனியின் கடன்படு நிலைமையினை இழிவளவாக்குதல் போன்றவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்புடையதாகக் காணப்படுகின்றது. |
| (இ) | கம்பனியின் சாதகமற்ற நிதி நிலைமையினால் அரச உத்தரவாதத்தின் கீழ் 2019 யூன் இல் முதிர்ச்சியடைகின்ற முறியினை தீர்ப்பனவு செய்வதற்கு ஆண்டிற்கு 7 சதவீத வட்டி விகிதத்துடன் ஐ.அ.டொலர் 175 மில்லியன் பெறுமதிக்கு( அண்ணளவாக ரூபா 33,215 மில்லியனுக்குச் சமனாக ) ஐந்து வருட சர்வதேச முறிகளினை 2019 யூன் இல் கம்பனி வழங்கியிருந்தது. முறியின் மீள்கொடுப்பனவு 2024 யூன் இல் இடம்பெறுகின்றது. | முறியின் மீள்கொடுப்பனவு 2024 யூன் இல் மேற்கொள்ளப்படுவதுடன் இந்த நோக்கத்திற்காக நியமதிக்கப்பட்ட சர்வதேச ஆலோசர்களின் வழிகாட்டியின் கீழ் நிதி அமைச்சினால் ஒட்டுமொத்த வெளிவாரி கடன் மீள்கட்டமைப்பின் பகுதியொன்றாக முன்வைக்கப்படுகின்றது. | வியாபாரத்தினை சிக்கனமானதாக மற்றும் இலாபத்தன்மை வாய்ந்த முறையில் நடாத்திச் செல்லுதல் மற்றும் கம்பனியின் கடன்படு நிலைமையினை இழிவளவாக்குதல் போன்றவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்புடையதாகக் காணப்படுகின்றது. |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவு

கம்பனியின் செயற்பாட்டு விளைவு ரூபா 45,231.46 மில்லியன் தொகையான நட்டமொன்றாகக் காணப்பட்டதுடன் முன்னைய ஆண்டின் நட்டம் 47,197.86 மில்லியன் தொகையாகும். ஆகையினால், நிதி விளைவில் ரூபா 1,966.40 மில்லியன் முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டின் போது ரூபா 4,999.21 மில்லியனுக்கு ஊழியர் கிரயம் குறைந்தமை மற்றும் ரூபா 16,433.45 மில்லியனிற்கு வெளிநாட்டு வழங்குனர்கள் கொடுப்பனவுக்ள மீதான பிடித்துவைத்தல் வரிக்கான ஏற்பாடுகளை மாற்றியதனால் ஏனைய வருமானம் மற்றும் மிகைகள் அதிகரித்தமை பிரதான காரணங்களாகவிருந்தன.

## 2.2 பிரதான வருமானம் மற்றும் செலவின வகைகளின் போக்கு பகுப்பாய்வு

| | 2020/21 ரூபா. மில்லியன் | 2019/20 ரூபா. மில்லியன் | முன்னேற்றம் / பற்றாக்குறை ரூபா. மில்லியன் | சதவீதம் (%) |
|---|---|---|---|---|
| **வருமானம்** | | | | |
| – பயணிகள், சரக்கு, மிகைப் பொதிகள் மற்றும் அஞ்சல் | 43,979.12 | 164,743.85 | (120,764.73) | (73) |
| – விமான முடியுமிடம், தீர்வை அற்ற பட்டியல்படுத்தப்படாத சேவைகள் மற்றும் விமான உணவு ஏற்பாடு செய்தல். | 6,714.73 | 15,407.17 | (8,692.44) | (56) |
| – ஏனைய வருமானம் மற்றும் மிகைகள் | 20,628.65 | 3,046.13 | 17,582.52 | 577 |
| **செலவினம்** | | | **(முன்னேற்றம்)** | **/ற்றாக்குறை** |
| விமான எரிபொருள் கிரயம் | 10,569.38 | 55,327.75 | 44,758.37 | 81 |
| விமான பராமரிப்பு மற்றும் மேந்தலைக் கிரயம் | 13,695.34 | 22,820.26 | 9,124.92 | 40 |
| பெறுமானத்தேய்வு / நட்டக்கழிவு | 16,295.62 | 19,013.83 | 2,718.21 | 14 |
| விற்பனை சந்தைப்படுத்தல் மற்றும் விளம்பரப்படுத்தல் செலவினங்கள | 2,033.93 | 14,540.51 | 12,506.58 | 86 |
| நாணயமாற்று நட்டம் | 6,894.60 | 6,118.51 | (776.09) | (13) |
| தேறிய நிதிக்கிரயம் | 35,147.97 | 40,073.31 | ,925.34 | 12 |

(அ) பயணிகள், சரக்கு, மிகைப் பொதிகள் மற்றும் அஞ்சல் வருமானம் மற்றும் விமான முடியுமிடம், தீர்வை அற்ற பட்டியல்படுத்தப்படாத சேவைகள் மற்றும் விமானம் சமையல் வருமானங்கள் கொவிட் 19 நிலமையால் பயணங்களில் ஏற்பட்ட வரையறையால் மீளாய்வாண்டின் போது முறையே 73 சதவீதத்தால் மற்றும் 56 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் போது ரூபா 16,433.45 மில்லியனிற்கு வெளிநாட்டு வழங்குனர்கள் கொடுப்பனவுகள் மீதான பிடித்துவைத்தல் வரிக்கான ஏற்பாடுகளை மாற்றியதனால் ஏனைய வருமானம் மற்றும் மிகைகள் 577 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

(இ) இலங்கை ரூபாய்ப் பெறுமதி தேய்வடைந்தமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் போது 13 சதவீதமாக வெளிநாட்டு நாணயமாற்று நட்டம் ரூபா 776.09 மில்லியனால் அதிகரித்திருந்தது.

**2.3 விகிதப் பகுப்பாய்வு**

| | 2020/21 | 2019/20 | 2018/19 | 2017/18 | 2016/17 |
|---|---|---|---|---|---|
| நடைமுறைப் பொறுப்புக்களிற்கான நடைமுறைச் சொத்துக்கள் (தடவைகளின் எண்ணிக்கை) | 0.13 | 0.13 | 0.18 | 0.23 | 0.21 |
| வருமானத்திற்கான தேறிய நட்டத்தின் சதவீதம் | 89 | 26 | 24 | 11 | 21 |
| வருமானத்தில் அதிகரிப்பு / (குறைவு) சதவீதம் | (72) | (0.1) | 11.7 | 19.3 | 4.6 |
| ஒட்டுமொத்த வருமானம் (தொன் கிலோமீற்றர் வருமானத்திற்கான தேறிய போக்குவரத்து வருமானம்) (ரூபா.) | 146.86 | 99.03 | 91.32 | 84.24 | 80.08 |
| அலகுக் கிரயம் (ரூபா.) | 105.23 | 74.22 | 74.31 | 65.74 | 61.61 |
| இலாப நட்டமற்ற ஏற்றும் காரணி (மூ) | 71.65 | 74.95 | 81.37 | 78.04 | 76.94 |
| வருமான பிரயாணிகளின் கிலோமீற்றர் ஒன்றிற்கான வருமானம் (ரூபா.) | 21.80 | 10.15 | 9.43 | 8.62 | 8.43 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2016.'.2017ஆம் ஆண்டில் கம்பனியின் நடைமுறைப் பொறுப்புக்களுக்கான நடைமுறைச் சொத்துக்கள் விகிதம் 0.21 ஆகவிருந்ததுடன் இது மீளாய்வாண்டில் தொடர்ச்சியாக 0.13 இற்கு குறைவடைந்தது. ஆகையினால், அது கம்பனியின் பலவீனமான தொழிற்படு மூலதன நிலையினைக் காட்டுகின்றது.

(ஆ) வருமானத்திற்கான தேறிய நட்டச் சதவீதம் முன்னைய ஆண்டில் 02 சதவீதத்தினால் அதிகரித்திருந்ததுடன் அது 63 சதவீதத்தினால் மீளாய்வாண்டில் அதிகரித்திருந்தது.

(இ) 2016.'.17 ஆம் ஆண்டிலிருந்து ஒட்டுமொத்த வருமானம் தொடர்ச்சியாக அதிகரித்திருந்ததுடன் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் போது அது 47.83 இனால் அதிகரித்திருந்தது. (தொன் கிலோ மீற்றர் வருமானத்திற்கான தேறிய போக்குவரத்து வருமானம் - ரூபா.)

(ஈ) 2016.'.17 ஆம் ஆண்டிலிருந்து 2020.'.21 வரையிலும் அலகுக் கிரயம் தொடர்ச்சியாக அதிகரித்திருந்ததுடன் மீளாய்வாண்டில் 74.22 சதவீதத்திலிருந்து 105.23 சதவீதத்திற்கு 31.01 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

## 3. கணக்கணிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 3.1 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2030 ஆம் ஆண்டிற்கான ஐக்கிய நாடுகளின் நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலினைப் பற்றி அறிந்திருப்பதற்கு ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் லிமிட்டட் தவறியிருந்தமை காரணமாக, அதன் செயற்பாடுகளுடன் தொடர்புடைய நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் மற்றும் குறிக்கோள்களினை இனங்காண்பதற்கு அத்துடன் அந்த இலக்குகளினை அடைந்து கொள்வது தொடர்பில் மைல்கற்களுடன் அவ்வாறான இலக்குகளினை அடைந்து கொள்வதனை மதிப்பிடுவதற்கான குறிகாட்டிகளினை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இலங்கை எஸ்டீஜிஎஸ் அடைவுகளினை நோக்கியதாக செயல்முன்னேற்றத்தினை துரிதப்படுத்துவதற்கான தேவையினை இனங்கண்டிருந்ததுடன் பல ஆண்டுகளாக பல்வேறு பயனுள்ள செயற்திட்டங்களினை நிறைவேற்றுவதன் மூலம் அதன் அர்ப்பணிப்பு மற்றும் ஆதரவினை நிரூபித்துள்ளது. நற்சுகாதாரம் மற்றும் நல்வாழ்க்கை, தரமான கல்வி மற்றும் சுத்தமான நீர் மற்றும் தூய்மை தொடர்பில் இலங்கையர் பாரியதொரு எண்ணிக்கையான செயற்திட்டங்களினை நடாத்துகின்றது. இது நாளதுவரையாக்கப்பட்ட வணிகத்திட்டத்திற்கு ஒருங்கிணைக்கப்பட்டிருந்தது. | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் மற்றும் குறிக்கோள்கள் எஸ்டிஜீ இலக்குகளின் பிரகாரம் முகாமைத்துவத்தால் இணங்கானப்பட வேண்டியதுடன் தாபிக்கப்பட்ட நிபந்தனைகளின் பிரகாரம் மதிப்பிடப்பட வேண்டும். |